# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109492

1. District மாவட்டம் : திருச்சிராப்பள்ளி PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 14 Date: நாள் 12.12.2022

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended 2018) Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 10.12.2022 Date to : நாள் வரை 1700 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் - Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2022 Time : நேரம் 0700 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் - Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓ கணினி மூலமாக தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வடக்கு சுமார் 30 கி.மீ
   Beat Number : முறைக் காவல் எண் - (b) Address : முகவரி -
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் - District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மா. யுவராஜ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மாணிக்கம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 10.06.199? (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் போட்டோ ஸ்டுடியோ (g) Address : முகவரி K.N. நகர், கோவிந்தாபுரம், லால்குடி தாலுகா, திருச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tmt. [illegible], காவல் ஆய்வாளர்
   லால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம், திருச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   பீதியால் தாமதம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : -
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: -
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : -
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Yuvaraj 12/12/22

12/12/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.12.2022

Name: பெயர் F. Xavier Rani
Rank: நிலை Inspector of Police, No எண் ...... Vigilance and Anti Corruption, Trichy.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)p.2

<u>கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.</u>

<u>திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/2022–ன் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் 12–ன் தொடர்ச்சி...</u>

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று (12.12.2022) காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி மாவட்டம், லால்குடி தாலுகா, மேலாவாளடி, K.N.கார்டனை சேர்ந்த மாணிக்கம் மகன் திரு.மா.யுவராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், லால்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வளர் திருமதி.மாலதி மற்றும் புகார்தாரர் திரு.யுவராஜ் ஆகியோரின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை மேற்கொண்டு, இன்று 12.12.2022 காலை 09.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.14/2022 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் மா.யுவராஜ், வயது 39/22, த/பெ மாணிக்கம், K.N.கார்டன், மேலவாளாடி, லால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம். பெறுநர் உயர்திரு. காவல்துறை ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி. அய்யா, நான் திருச்சி மாவட்டம், லால்குடி தாலுக்கா, மேலவாளாடியில் எனது மனைவி வைதேகி, மகள்கள் வைஷ்ணவி, யுவஷ்ஸ்ரீ ஆகியோருடன் வசித்து வருகிறேன். எனது மகள் வைஷ்ணவி, மண்ணச்சநல்லூரில் உள்ள மாடர்ன் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு படித்து வருகிறாள். எங்கள் வீட்டுக்கு அருகில் மனைவி மற்றும் குழந்தைகளுடன் வசித்து வரும் ஜெகதீசன் என்பவர் எனது மகளுக்கு பாலியல் ரீதியாக துன்புறுத்தலும் மற்றும் கொலைமிரட்டல் விடுத்து வந்த காரணத்தால், நான் லால்குடி அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளர் திருமதி.மாலதி அவர்களிடம் அளித்த புகாரின்பேரில், ஜெகதீசனின்மீது போக்சோ சட்டத்தின்கீழ் வழக்கு எண்.43/2022–ன்படி கடந்த 2.11.2022 அன்று வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்தார். தற்சமயம்

இந்தவழக்கின் புலன்விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஆய்வாளர் திருமதி.மாலதி அவர்கள் என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொன்னதன் பேரில், 10.12.2022 சனிக்கிழமை மதியம் சுமார் 12 மணியளவில் லால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று ஆய்வாளர் மாலதி அவர்களை சந்தித்தேன். அப்போது ஆய்வாளர் மாலதி என்னிடம், உங்களது கேஸ் சம்மந்தமான புலன் விசாரணை அனைத்தையும் முடித்துவிட்டேன். இனிமேல் கோர்ட்டில் சார்ஜ்சீட் போட வேண்டியதுதான் பாக்கி, உங்களுக்காக நான் இந்த கேசை ரொம்ப கஷ்டப்பட்டு சீக்கிரமே முடித்துள்ளேன். அதனால், நீங்க எனக்கு 5000 ரூபா கொடுத்திடுங்க என்று கேட்டார். நான் அதற்கு, பொம்பள புள்ளங்கள வச்சுகிட்டு ரொம்ப கஷ்டப்படுறேன் மேடம், 5000 ரூபா எதுக்கு மேடம், கோர்ட்டுக்கு ஏதும் கட்ட வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் கோபத்துடன், என்னப்பா, ஒண்ணும் தெரியாதமாதிரி கேள்வி கேக்குற, பொட்டபுள்ள சம்மந்தமான கேசு என்பதால் ஒரு மாசத்துக்குள்ள இந்த கேசை முடிச்சதே பெரிய விசயம், ஒழுங்கா ரெண்டு நாள்ல 5000 ரூபா பணத்தோட வந்து என்ன பாரு என்று கோபமாக கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும், அப்போதைக்கு என்ன செய்வதென்று தெரியாமல் சரிங்கமேடம், திங்கக்கிழமை பணத்தோட வருகிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். எனது வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் சார்ஜ்சீட் போடுவதற்காக என்னிடம் 5000 ரூபாய் லஞ்சம் கேட்ட லால்குடி அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளர் திருமதி.மாலதியின் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (M.யுவராஜ்) 12.12,2022. Sir, Submitted to the Court of the Hon,ble Special Judge, Special Court for Prevention of Corruption Act 1988, Tiruchirappalli. Received the report at 07.00 hrs on 12.12.2022 and made preliminary enquiry and registered a case in Trichy V&AC Cr.No.14/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 09.00 hrs on 12.12.2022. Sd.xxx (F.XAVIER RANI) 12.12.2022 Inspector of Police, Vigilance & Anti-Corruption, Trichy.

12/12/22
Inspector of Police,
V&AC, Trichy.